இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation

2009

தை, மாசி, பங்குனி

# Vettimaniy
# வெற்றிமணி

மணி -58

ஓசை 08

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A.(Hons)

யேர்மனியில் இருந்து வெளிவரும்
ஆன்மீகக் காலாண்டிதழ்
சிவத்தமிழ்
அறிவியலோடு ஒட்டிய ஆன்மீகக்
கட்டுரைகளை வரவேற்கின்றோம்
M.K.S.Sivakumaran 00492351 458862
Bost.Box 2765
58477 Lüdenschied
Germany
மின்னஞ்சல்: Vettimaniy@hotmail.com

UNIVERSITY OF JAFFNA LIBRARY
MAR 2009
PERIODICALS DIVISION

## புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் நாய்கள்







தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



சிறுவர் அரங்கில்....

விளையாட்டரங்கில்....





கலையரங்கில்....

கலையரசி ஒலிவியா





U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka
Ayngaran International
மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்
30, High Street, Collierswood, London SW19 2AB, UNITED KINGDOM




மாணவர் மனங்களில் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிமணி

*Vettimaniy*



ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

**கௌரவ ஆலோசகர்**
**காலநிதி மனோன்மணி**
**சண்முகதாஸ்**

**பிரதம ஆசிரியர்**
“ஓவியக்கலைவேள்”
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.
*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*

**இணையாசிரியர்**
**திருமதி**
**வலன்ரீனா இளங்கோவன்**
(B.A.Hons), Dip.in Edu.
*Associate Editor*
Mrs. Vlanteena Elangkovan,
(B.A.Hons), Dip.in Edu.

தொடர்புகளுக்கு:
தபால் பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்

மக்கள் தொடர்பு:
**திரு. சு. இளங்கோவன்**
(Dip.in.S.Sc,Dip.in F.Sc, Dip. in S.B.M.)
(யாழ்ப்பாணம்)

Dr. **கதிர்துரைசிங்கம்** (M.B.B.S)
(கனடா)

**சமூகஜோதி த. புவனேந்திரன்**
(ஜேர்மனி)

**திரு. சஞ்சீவன் சிவகுமாரன்**
(B.Sc.Eng.)
(இங்கிலாந்து)

**“வெற்றிமணிமொழி”**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
**அரவிந்தர்**

## வாசகர்கள் கவனத்திற்கு!



அடுத்து வரும் வெற்றிமணி பத்திரிகைக்கு கட்டுரைகள், கவிதைகள், கதைகளை மாணவர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் வரவேற்கின்றோம். அத்தோடு தேசிய, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களது புகைப் படங்கள், விபரங்களையும் அனுப்பி உதவவும்படி கேட்டுக் கொள்கிறோம். வெற்றிமணியை உங்களது நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

திருமதி வலன்ரீனா இளங்கோவன்
வெற்றிமணி இணை ஆசிரியர்.

## கடிகாரமல்ல...



பாவனைப் பொருட்களை ஒரு விதத்தில் ஆபரணங்கள் போல் தயாரிப்பது இன்று நாகரிகம். கைவளையலில் கடிகாரம், பதக்கத்துள் கடிகாரம், கடிகாரத்துள் வானொலி இப்போ கடிகாரம்போல் ஒரு கைத்தொலைபேசி. இதனை சீமென்ஸ் தாபனத்தினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். இது விரைவில் சந்தைக்கு வரவுள்ளது. இனி கைத்தொலைபேசி என்றாலே கடிகாரம் என்னும் அளவிற்கு இளசுகள் மத்தியில் பிரபல்யமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# தைப்பொங்கல்



தமிழர் தம் பண்டிகை விழாக்களில் முதன்மைச் சிறப்புப்பெறும் பண்டிகையாய் தைப் பொங்கல் அமைகின்றது. இறை வனுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய சந்தோச தொடர்பை ஏற்படுத்தும் நிகழ்வாய் விரதங்களும், விழாக்களும் அமைகின்றன. அந்த வகையில் தைப் பொங்கல் சூரியபகவானுக்கு நன்றி தெரிவித்து பூஜிக்கும் விழாவாகவும் உழவர் தம் மகிழ்வு பெருவிழாவாகவும் “தைப்பொங்கல்” எனும் பண்டிகை சிறப்புப் பெறுகின்றது.

நம் வாழ்வில் நாம் கண்டு வாழும் மாதங்கள் பன்னிரெண்டு. அவற்றைச் சேர்த்து ஒரு வருடம் என வகுக்கின்றோம். இந்த வருடம் தேவர்களுக்கு ஒருநாள் ஆகின்றது. அந்த வகையில் “உத்தராயணம்” என்று சொல்லப்படுகின்ற ஆறுமாத காலம் தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையான காலங்கள் தேவர்களின் பகற்பொழுதும் “தெட்சணாயனம்” எனப்படும் ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையான ஆறுமாத காலம் இரவுப் பொழுதுமாய் மறைந்து காலைப் பொழுதில் பொற்கதிராய் சூரியனை தேவர்களும் வரவேற்று உபசரித்து பூஜிப்பார்கள் என்பது உண்மை.

அந்த நாள் எமக்கு தைப்பொங்கல் திருநாளாய் அமைகின்றது. உலக வாழ்வியலில் உழவர் இல்லையேல் மனிதர் உயிர்வாழ முடியாது. உழவுத் தொழில் அத்தகைய தெய்வீகம் பொருந்தியதாகும். ஆந்த உழவரின் பயிர் செழிப்பிற்கு திருவருள் தரும் தெய்வமாய் விளங்கும் சூரிய பகவானுக்கு உழவர் தம் நன்றியைத் தெரிவிக்கும் விழாவாகவும் சிறப்புப் பெறுகின்றது. ஆனைத்து தமிழ் மக்களும் தைப்பொங்கல் திருநாளைப் புதுப் பொலிவோடு வரவேற்று கொண்டாடுகிறார்கள்.

எனவே நாம் தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்வோம்.

# பணக்கார எழுத்தாளர்



பணக்கார எழுத்தாளர் ஹாரி பாட்டர் புத்தக வரிசை மூலம் ரூபா 1400 கோடி (இந்திய ரூபாய்) குவித்த J.K. ரவுளிங் உலகின் பணக்கார எழுத்தாளர்களுக்கான போர்ப்ஸ் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார், உலகம் முழுவதும் பணக்கார எழுத்தாளர்களின் வரிசையை முன்னணி பொருளாதார பத்திரிகையான போர்ப்ஸ் வெளியிட்டுள்ளது. அதன்படி முதலிடத்திலுள்ள J.K.. ரவுளிங் கடந்த 2007, 08ம் ஆண்டில் மட்டும் சம்பாதித்த தொகை 1400 கோடி.


J.K. ரவுளிங்கின் ஹாரி பாட்டர் கதைப் புத்தகங்களில் கடைசியான வெளியான ஹாரி பாட்டர் புத்தகம் மட்டும் உலகம் முழுவதும் 4.4 கோடி பிரதிகள் விற்றுத் தீர்ந்துள்ளன. அவர் இதுவரை வெளியிட்ட மொத்தத் தொகுதிகள் 37.5 இலட்சம் பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

## அதிசய விலைகள்!!!



உலகில் அதிக விலையுள்ள காரின் பெயர் 250 GTO Ferrari. இதனது விலை 10 மில்லியன் டொலராகும்.

உலகில் உயர்ந்த உருளைக் கிழங்கின் விலை 1Kg 500 டொலர். இந்த உருளைக் கிழங்கின் பெயர் LaBonntte இது பிரான்ஸ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.









**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மொழி மனிதனுடைய கருத்துத் தொடர்பாடலுக்கான கருவியாகும். தனது எண்ணங்களைப் பிறருக்கு அறிவிப்பதற்கும் பகிர்வதற்கும் மொழியை அவன் நன்கு பயன்படுத்துகிறான். சமூக அங்கத்துவன் என்ற நிலையில் தனது தனித்துவத்தையும் இருப்பையும் புலப்படுத்த மொழியாற்றல் தேவை. பண்பாடு என்ற சொல் மனவளம் என்ற பொருளுடையது. மனிதனுக்குரிய இயல்பான குணங்கள் பண்படுத்தப்பட்ட நல்ல நிலம்போல வளமுடையதாய் இருக்க வேண்டும். அமைதியும் பொறுமையும் காத்துப் பிறர்நலம் பேணும் மனநலமே பண்பாடு என வரையறை செய்யப் பட்டுள்ளது. பழைய இலக்கியமாகிய கலித்தொகை “பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்“ எனப் பதிவுசெய்துள்ளது.

இத்தகைய பண்பட்ட நிலையை மொழியால் வெளிப்படுத்தும் நயத்தக்க நாகரிகமும் உண்டு. பண்பட்ட சொற்களால் உரையாடும்போது தொடர்பாடல் இனிதாய் நடைபெறும். பண்பாட்டை வெளிப்படுத்தும் சொற்கள் இன்று அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை. ஒருவரை ஒருவர் நேரில் காணும்போது கூட என்ன பேசுவது என்று தயங்கி நிற்கின்ற நிலையும் உண்டு. மூத்தவர் முன்னிலையில் உரையாடும்போது நயமாக உரையாடும் பண்பு தேவை. வயதில் முதியவரை ஒரு இளையவர் கண்டால் தலையைத் தாழ்த்தி “வணக்கம்“ என்று கூறி நிற்பதே நன்று. இது இளையவரின் பண்பட்ட வளர்ப்புச் சூழலை உணர்த்திநிற்கும்.


ஆனால் வயதில் மூத்தோரைக் கண்டால் மட்டுமன்றிச் சமவயதுடையோருக்கும் “வணக்கம்“ கூறுவது நன்று. உரையாடலைத் தொடர்வதற்குரிய வாய்ப்பு இதனால் ஏற்படும். ஊமைகளாக ஒருவரையொருவர் கடந்து செல்லும்போது மனிதக் குணநலமற்ற ஒரு விலங்கு மனத்தையே நாம் காணலாம்.

எனினும் தற்காலத்தில் ஆங்கில மொழியின் செல்வாக்கினால் சில சொற்களையும் சொற்றொடர்களையும் பரிமாறும் நிலை தோன்றிவிட்டது. பிறமொழி ஒன்றின் தொடரைப் பயன்படுத்த இன்று யாரும் கூச்சப்படுவதில்லை. பிறமொழிப் புலமை இல்லாவிடினும் உரையாடலின்போது சொற்களையோ தொடர்களையோ பயன்படுத்தக் கூச்சப்படுவதில்லை. இந்நிலையால் தாய் மொழியின் சிறப்பை நாமே கெடுக்கும் சூழ்நிலை உருவாகின்றது. தனது தாய்மொழியில் தனது பண்பட்ட நிலையால் உரையாடல் செய்யும்போது அது செம்மையானதாக இருக்கும். மொழிக்கும் பண்பாட்டுக்குமிடையேயுள்ள நெருக்கமான தொடர்பை இளைய தலைமுறை அறியவேண்டும். எமது முன்னோரின் வாழ்வியல் நடைமுறைகள் பண்பாட்டை வெளிப்படுத்தும் களங்களாகவுள்ளன. அக்களங்களிலே பெற்ற அறிவை மொழியால் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்“ என்னும் முதுமொழியைக் கூறலாம். வாழ்வியல் அனுபவத்தைத் தமக்குப் பின்வரும் தலைமுறையினருக்கு நயமாகக் கூறிப் பண்பாட்டு நிலையை மொழியால் வரையறை செய்திருக்கும் முறைமை சிறப்பானது.

**பேசுகிறவன் விதைக்கின்றான் கேட்பவன் அறுவடை செய்கின்றான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்று நோயைக் கண்டுபிடிக்கும் நாய்கள்




கொலை, கொள்ளை, கண்ணிவெடி எனவும் விலங்குகளை வேட்டையாடவும் புறத்தே உள்ள கொடுமைகளை ஒழிப்பதற்காகவும் தேவைகளைத் தீர்ப்பதற்காகவும் பல நூறு வருடங்கள் நாய்களைப் பாவித்த மனிதன் இன்று அகத்தே உள்ள தேவைகளைத் தீர்க்கவும் நோய்களைக் காணவும் உதவும் ஆற்றல் மிக்கது நாய் என்பதை இங்கிலாந்து கேம்பிறிச் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுகொண்டுள்ளனர்.

நாய்க்கு மனிதனைவிட நுகரும் சக்தி 10 மடங்கு மேலானது. அத்துடன் நாய்க்கு மூக்கிற்கும், மூளைக்கும் இடையே உள்ள தொடர்பு அதிகம். இந்த அபூர்வ சக்தியை வைத்து வேட்டையாட நாய்களைப் பாவித்த நாம், ஏன் மனிதனுக்குள் இருக்கும் நோய்களை மோப்பம்பிடித்து அந்த நோய்களை வேட்டையாடி ஒழிக்க முடியாதா என்று எழுந்த சிந்தனையின் பயனே இன்று புற்றுநொய்க்கு நாய்களைப் பயன்படுத்தி அறியலாம் என்கிற அபூர்வ ஆய்வு ஏற்படக் காரணமானது.

1978ம் ஆண்டு ஒரு பெண் தான் வளர்த்த நாய் தனது காலில் ஒரு பகுதியைமட்டும் மோப்பம்பிடித்து தினமும் தினமுமு் நக்குவதை அவதானித்தாள். காலில் சில இடங்களில் புள்ளிகள் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட புள்ளியையே அந்த நாய் தினமும் நக்கியது. நக்கும்போது நாயைப் பிடித்து இழுத்தால் மூர்க்கத் தனத்துடன் இழுத்துக்கொண்டு வலிய வலிய அந்த ஒரே இடத்தையே நக்கியது. இதனால் அந்த அடத்தில் ஏதும் இருக்குமோ என்று எண்ணிய அப்பெண் வைத்தியர் தன்னைக் கேலி செய்தாலும் கவலையில்லை என்று எண்ணிக்கொண்டு வைத்தியரிடம் சென்றாள். வைத்தியரும் காலை நன்கு கவனித்துவிட்டு நாய் தினம் நக்கும் அவ்விடத்தில் சிறுதுண்டை வெட்டி பரிசோதனைக்காக அனுப்பிவைத்தார். ஆய்வு முடிந்து அந்தப் பெண்ணுக்கு காலில் புற்றுநொய் மிகமிகத் தொடக்க நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.


இதன் விளைவே இங்கிலாந்தில் நாய்களைக் கொண்டு புற்றுநொய் கண்டுபிடிக்கும் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 380 மில்லியன் பவுண்கள் புற்றுநொய் ஆய்வுக்காகச் செலவு செய்யும் அரசு நாய்களை இந்த நோய்களின் ஆய்வுக்குப் பயன்படுத்தினால் என்ன என்று எண்ணியதில் வியப்பில்லை.

கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் சாளி கிளறிக்கன் என்பவரை நாய்களுக்கு பயிற்சியாளராக நியமித்து இந்த ஆய்வினை ஆரம்பித்தது. முதலில் நான்கு கிண்ணங்களில் ஒன்றில் மட்டும் உணவினை வைத்து மோப்பமிட வைத்தனர். அப்போது நாய் அந்த உணவு இருக்கும் கிண்ணத்தைக் கண்டுபிடித்தது. நுாய்க்கு விரும்பிய உணவு கொடுக்கப்பட்டது. தான் கண்டுபிடித்தால் தனக்கு நல்ல உணவு கிடைக்கும் என்ற அவாவினை முதலில் நாய்க்குத் தூண்டினர்.

அடுத்து மனிதனது சிறுநீரை ஒரு கிண்ணத்தில் வைத்து வேறு வெறும் கிண்ணங்களையும் வைத்தனர். நாய சரியாக சிறுநீர் உள்ள கிண்ணத்தை மோப்பம் பிடித்தது.

அடுத்து சிறுநீரை மூன்று கிண்ணத்திலும் புற்றுநோய் கண்ட ஒரு மனிதனது சிறுநீரை ஒரு கிண்ணத்திலுமன் வைத்து நாயை மோப்பமிட வைத்தனர். நாய் வித்தியாசமாக இருக்கும் நோய் கண்டவரது சிறுநீரை மோப்பம் கண்டது. இவ்வாறு செய்கின்றபோது 100க்கு 60 வீதம் சரியாகக் காட்டியது.

இதனை 1.04.1989ம் ஆண்டு உத்தியோகபூர்வமாக பத்திரிகைகள் அறிவித்தன. இருந்தும் அத்திகம் April Fool Day என்பதனால் மக்கள் பொய் என்று எண்ணினார்கள். பின்னர்தான் அது உண்மை எனப் புரிந்தனர். பின்னர் 7.03.2003 கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நுரையீரல் புற்றுநோய் உண்டா என அறிய இந்த நாய்களின் உதவியை நாடினர். ஒரு பலூனை நோய் உள்ளவர்களையும், நோய் அற்றவர்களையும் ஊதவிட்டு அந்தக் காற்றை நாயினைக் கொண்டு மோப்பம் பிடித்தனர். நாய் 98 வீதம்


பயிற்சிப் பாடசாலைக்குச் செல்லும் நாய்கள்

சரியாக புற்றுநோய் நுரையீரலில் உள்ளவரைக் கண்டு பிடித்தது. இதனால் நுரையீரல் புற்றுநோயைக் கண்டுபிடிக்க நாய் சிறந்தது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. சூாதாரணமாக ஒரு வைத்தியர் புற்றுநோய் உண்டா எனக் கண்டுபிடிக்கும் போது அது உடலில் அதிகம் பரவிய நிலையில் அதாவது முற்றிய நிலையை அடைந்திருக்கும். ஆனால் நாய் நுகர்ந்து அதன் ஆரம்ப கட்டத்திலேயே கண்டுகொள்ளும்.

எனவே நாய் வைத்தியரைவிட மேலானது அல்லவா என ஒரு வைத்தியரைக் கேட்டபோது நாய் தங்களது வேலையைச் சரியாகச் செய்யும் என்று உறுதியானால் தமது வேலைகளை நாயாரிடம் விடுவதில் ஆட்சேபனை இல்லை என்று விகடமாகப் பதில் சொன்னார். விகடமானாலும் விசயம் உண்டல்லவா?

ஒரு சாதாரண நாயினை புற்றுநொய் மோப்பம் பிடிக்க பயிற்றுவிப்பதற்கு 3 வாரம் போதுமானது என்கிறார் அதன் பயிற்சியாளர். ஆனால் ஒரு வைத்தியரைப் படிப்பிக்க 4 முதல் 7 வருடங்கள் ஆகும். எனவே நாய்கள் இங்கு மனிதனை விட உயர்ந்துவிட்டன அல்லவா?

இருந்தும் நாய்களை நம்பாதீர்கள் அதனைவிட இயந்திரங்களைக் கண்டுபிடியுங்கள் என ஒரு சாரார் குரல் கொடுக்கின்றனர். நாய்கள் கண்டுபிடித்தாலும் மருத்துவம் செய்யப்போவது வைத்தியர்கள்தானே என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும் என்று எதிர்ப்போருக்கு பதில் கொடுப்பவரும் உண்டு. சுவாசப்பைப் புற்றுநொயைக் கண்டுபிடிக்க நாய்களைப் பயன்படுத்துமு் முறை விரைவில் வரலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஒரு மனிதன் ஒரு உணவைச் சுவைத்து நன்றாக இருக்கிறது என்று மட்டும்தான் சொல்வான். ஆனால் நாய் அந்த உணவில் என்ன என்ன எவ்வளவு வீதம் உண்டு என்பதைப் பகுத்து அறியும் வல்லமை கொண்டது என்கிறார் நாய்களின் பயிற்சி. எனவே நாயின் மோப்ப சக்தியை மனிதனின் ஆரோக்கியத்திற்கு பயன்படுத்துவதில் என்ன தவறு. எனவே நம்பிக்கையுடன் அதனைப் பயன்படுத்தலாம் என்கிறார் பயிற்சியாளர் சாளி கிளறிக்கன்.


நாய் உங்கள் மேனியில் செல்லமாக நக்கினால் பயந்துவிடாதீர்கள். ஆனால் ஒரே இடத்தில் நக்கினால் செல்லம் என்று இருந்துவிடாதீர்கள். உங்கள் உடலில் செல் அதாவது கலங்களில் ஏதாவது கோளாறு உண்டு என்று உடன் வைத்தியரை அணுகுங்கள். வரும் முன் காப்பது கேலியல்ல, அதுதான் நோய்க்கு நாம்போடும் வேலி.

## வெற்றிமணி வாழ்த்துகிறது



வெற்றிமணி விழாக்களில் மங்கள வாத்திய இசையினைப் பொழிந்த நாச்சிமார்கோவிலடி திரு. விமலன், திருமதி. சரண்யா விமலன் ஆகியோர் 23.11.2008 அன்று திருமண பந்தத்தில் இணைந்தனர். அவர்களை வெற்றிமணி பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வாழ்த்துகின்றது.

# பௌதீக வினாத்தாளின் அமைப்பு



திரு. செ. சுகேந்திரன்
B.Sc (Special in Physics)

5 – நினைவுகூறல்
20 – எண்ணக்கருக்களை கிரகித்தலும் விளங்கிக் கொள்ளலும்
25 – பிரயோகம்
10 - பகுத்தல், உயர்மட்டம்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைகின்றது. அதாவது பகுதி I, பகுதி II. பகுதி I இரண்டு மணித்தியாலங்களைக் கொண்ட 60 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இவை இரண்டு மணித்தியால கால நேர இடைவெளியில் செய்து முடித்தல் அவசியமாகும். பெரும்பாலான மாணவர்கள் அண்மையில் வந்த வினாத்தாள்கிற்கு அமைய குறித்த நேரத்தில் விடை அளிக்காமல் இருப்பதை அவதானிக்கக்கூடிய இருக்கிறது. இதற்கு அவர்களின் பாடப்புலமைக்கான பயிற்சி போதாதென்று சொல்ல வேண்டும். கிரகிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் கிரகிக்காது கவனக்கலைப்பான்கள் மீது அவர்களுடைய சிந்தனை பதித்துவிடுவதே காரணமாகிவிடுகிறது. எந்தவொரு வினாத தாளும் மாணவர்களைச் சித்தியடையும் எண்ணிக்கையை குறைக்கவேண்டும் என்ற அடிப்படையில் தயாரிக்கப் படுவதில்லை.

இவ்வினாத்தாளை இலகுவாகவும் வெற்றிகரமாகவும் உச்சப்பயன்மிக்கதாக அதிகூடிய புள்ளியைப் பெறத்தக்கவாறு விடையளிக்கவேண்டுமாயின், முதலில் வினா நன்கு விளங்கத்தக்கவாறு வாசிக்கவேண்டும். பெரும்பாலான மாணவர்கள் ஒருவழிக் கற்றல்முறை மூலமே பாடப்புலமையைக் கற்றுள்ளார்கள். இதனைத் தவிர்த்து சுயமாகவே பல வினாக்களைச் சிந்தித்து விடையளித்துப் பயிற்சி பெற்றிருத்தல்வேண்டும். *உதாரணமாக:* ஆசிரியர் ஒரு வினாத் தொகுதியை வழங்கி அவ்வினாவிற்குரிய விளக்கத்தை அவரிடம் பெற்றுக்கொள்ள முன்பாகவே அவ்வினாவிற்குரிய விடையை மாணவர்கள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விடையளித்த பின்பே விளக்கத்தைப் பெறுவதன் மூலம் பாடப்புலமையை அதிகரிக்கச் செய்யலாம். மேலும் பரீட்சை மண்டபத்தில் கடினம் எனக்கருதும் வினாக்களுக்கு உடனடியாகப் பதிலளிக்காது, இலகுவாகக் கருதும் வினாக்களிற்கு உற்சாகத்துடன் விடையளித்தல் வேண்டும்.

பாட அலகுகள் முழுமையாகப் பூர்த்தி செய்து கற்றிருத்தல்வேண்டும். அவ்வாறு இல்லாது சில அலகுகளை முன்கூட்டியே தெரிவு செய்தும், சிலவற்றைத் தவிர்த்தும் பரீட்சை மண்டபத்திற்கு நுழையும் மாணவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்களாகும். ஏனெனில் அண்மையில் வெளிவரும் வினாத்தாள்கள் பல அலகுகளைக் கொண்ட ஒரு கலப்பு வினாவாக அமைகிறது. இதனால் அவர்கள் அவ்வினாவிற்கு பூரணமாகவும், திருப்தியாகவும் விடையளிக்கமுடியாமல் தவிக்கிறார்கள். எனவே ஒரு அலகு தவிர்க்கப்படாமல் எல்லா அலகுகளும் பூரணமாக ஆயத்தப்படுத்தப்பட்டு குறிப்பெடுத்திருத்தல் வேண்டும். பெரும்பாலான பௌதீக பல்தேர்வு வினாக்கள் விதிகள், தத்துவங்களின் பிரயோகத்திலும் சரியான அலகு மாற்றத்திலும் சார்ந்துள்ளதாகக் காணப்படுகிறது. எனவே விதிகளும் தத்துவங்கள், அலகுத் திட்டங்கள் என்பன சந்தேகமின்றித் தெளிவாக விளங்கியிருக்கவேண்டும். இவ்வாறான கற்றலை மேற்கொள்வதுடன் நாளாந்தம் குறைந்தது பத்து பல்தேர்வு வினாக்களிற்கு விடையளித்து பயிற்சி பெறும் மாணவர்களின் எதிர்காலம் ஒருநாளும் பாதியில் இருந்ததில்லை.

*'பயிற்சி எடுத்து பலனைப் பெறுவோம்'*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கம்

## சாதனையாளர்




யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த செல்வி சர்மலா சந்திரதாசன் பல்வேறுபட்ட சித்திரப் போட்டிகளில் பங்குபற்றி அனைததிலும் வெற்றிபெற்றவர். அற்லஸ் நிறுவனம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய சித்திரப் போட்டியில் பங்குபற்றி வடமாகாணத்திற்கான முதற்பரிசைப் பெற்றுள்ளார். இவர் சிலிங்கோ நிறுவனத்தால் நடாத்தப்பட்ட "ரண்தளு" சித்திரப் போட்டியிலும், அரச நிறுவர் கலை விழாவிலும் கல்வியியற் கல்லூரியால் நடாத்தப்பட்ட "அழகெழல்" போட்டியிலும் வெற்றிபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



எம். மயூரன்
தரம் 11
யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.

## எழுச்சி கொள்!



இரா. ஜெயக்குமார்
ஆசிரியர்
யா/நடேஸ்வராக் கல்லூரி.

என்னருமை மாணவனே
எழுச்சி கொள்!
எண்ணங்களை எரிபொருளாக்கி
சாதனை வண்டியில் சாகசம் புரி!
கற்பனைக் கண் கொண்டு
தடைகளைத் தவிர்த்திடு!
தன்னம்பிக்கையினால்
தடைகளைத் தகர்த்திடு!
மூளைத் திறனை
முடுக்கிவிடும் உணவுகளை
அளவோடு அருந்திப் பார்!
ஆனந்தத் தேன் சொரியும்.
வைகறையில் கண் விழித்தால்
வையகத்தில் உயர்ந்திடலாம்.
வைகறையில் நடைப் பயிற்சி
வளமான வாழ்வு தரும்.
வினாக்களைத் தொடுத்தால்
விஞ்ஞானி யாகிடலாம்.
அழகியல் கலைகளினால்
அமைதியினைப் பெற்றிடலாம்.
ஆடையில் கவனம்
அந்தஸ்தைக் கூட்டும்.
உள்ளுணர்வின் உதவியுடன்
முடிவெடுத்தால் விடிவுவரும்.
இளமையின் வளமையினால்
இமயத்தைத் தொட்டுவிடு.

## தாயைப் போற்றுவோம்



காலை மாலை கண்விழித்து
கடைசி வரைக்கும் கரை சேர்க்க
கல்வி கற்று முன்னேற
கண்ணியத்தோடு அவள் வளர்த்திடுவாள்

இன்பம் துன்பம் அவளறிவாள்
இனிமையாகக் கதைத்திடுவாள்
இன்சுவை உணவுகளைச் சமைத்திடுவாள்
இனிமையாக அவள் ஊட்டிடுவாள்

அன்பை அள்ளித் தருவதற்கும்
அகிலம் போற்றும் உத்தமனாய் வாழ்வதற்கும்
அளப்பரிய சேவை செய்யும் - எங்கள்
அன்னையைப் போற்றிடுவோம்.

ம. இம்ரான் பரீட்
தரம் - 7
தி/ பேராறு பரமேஸ்வரா மகாவித்தியாலயம்,
கந்தளாய், திருகோணமலை.

## மூன்று கைகள்

மனிதன் முன்னேற மூன்று கைகள் வேண்டும்.
ஆம் நம்பிக்கை என்கின்ற
மூன்றாவது கை.

ச. ரோஜர் கிளின்டன் குலாஸ்
தரம் - 11
மன் / பற்றிமா ம.ம.வி., பேசாலை, மன்னார்.

## இலட்சிய மனிதன்



இலட்சியப் பாதையில் நீ சென்றால்
இலட்சம் மக்கள் உன்னைத் தேடிடுவர்
இலட்சிய மனிதன் என்று கூற
உன்னை நீ புரிந்துகொள் மனிதனாக

இலட்சியம் என்றும் அழிவதில்லை
இலக்குகள் என்றும் முடிவதில்லை
இலட்சியப் பாதையில் முயற்சிசெய்
அதுவே உன்னை மனிதனாக்கும்

இலட்சியம் உனக்கு மட்டுமல்ல
தனக்கும் அது தேவையென்று
உலகம் உன்னைத் தலைவணங்கும்
இலட்சிய மனிதன் நீ என்று

இலட்சம் கோடி மக்கள் உனைச்சார
இலட்சிய வாதியாய் புறப்படு நீ – உன்
இலட்சியம் உனக்கு மட்டுமல்ல
உலகத்திற்கும் அது தேவையென்று

புறப்படு மனிதா புறப்படு
உலகம் என்றும் உனக்காகவே
உலகத்திற்காக நீ வாழ்ந்திட
இலட்சிய மனிதனாய்ப் புறப்படு.

ஜோ. சன்யுதா
தரம் 11
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## LOUIS BRAILLE




Louis Braille invented the system by which blind people could read. This system was named after him and was called "Braille".

Louis Braille was born in France. He had normal sight. But when he was three years old, he lost his sight, and became totally blind. He grew up and became a young man. He wanted to make the best of his life. He wanted to help other blind people to read.

Being a blind himself, Braille knew all blind people have a very good sense of touch in their fingers. He thought and invented the new system of raised dots standing for different letters. Thus he helped many blind people to read by touch.

Miss Shaliny. J
A/L (2008) Arts
J/ Vembadi Girl's High School.

## OUR VILLAGE



Our village is Karainagar. It is in the country of North. About 100 families live here. The chief occupation of our people is cultivation. Other workers such as carpenters and black smiths too live here. The people of my village earn their living by hard work. They are honest, law abiding and peaceful. It is a big village.

Our village abounds with many fields. Cultivation is done round the year. Paddy is cultivated during the rainy season. Grains, Vegetables and onions are cultivated during the dry season. Our people work in their field till night fall. The produces from the fields are in plenty. They are taken to markets in the near town. Our village is all most self – sufficient.

Our village has acommunity centre, rural development society and a library. The famous "Sivan temple" and famous "beach" are in the village. These centres held the people with various development schemes. The famous light house is in the village. There are two schools, a government dispensary, a sub post office and a co-operative shop. There are many beautiful temples in our village. The poojas and festivals in the temples keep the people pious.

Crime is a thing that is unheard of in our village. We enjoy a life peace, freedom and quietness in our village. I like to live in our village.

S. Sarvanan
Year 7
J/ Yalton College, Karainagar.

## கல்வி



கல்வி ஒரு பெரிய தேவை.
கல்வி ஒரு சவால்.
கல்வி ஒரு நம்பிக்கை.
கல்வி ஒரு வெற்றி.
கல்விச் செல்வி சரஸ்வதி அம்மா.

ஜெ. யாழினி.
தரம் - 6
யாழ் இந்து மகளிர் கல்லூரி.







Sivam
JET TRAVELS
குழுக்களாக ஐரோப்பிய நாடுகள்.
இந்தியா. இலங்கைப் பயணத்திற்கு...
சகல நாடுகளுக்கும் குறைந்த செலவில்
திருப்தியுடன் பறந்து செல்ல நாடுங்கள்.
4429 Sheppard Avenue East,
Scarborough, Ontario M1S 1V3-Canada.


எதனையும் செய்யாமல் முடியாது என்று எண்ணாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

சிறுவர் அரங்கம் சிறக்க
சிறுவர் மனங்கள் சிறக்கும்.

## நல்ல பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும்?



உங்களுக்குத் தெரியுமா எப்படி நல்ல பிள்ளைகள் இருக்கவேண்டும்? நல்ல பிள்ளைகள் பெரியோர்களை மதிக்கவேண்டும், எல்லோருக்கும் உதவி செய்யப் பழக வேண்டும், கடவுள் பக்தி உள்ளவராகவும் இருக்கவேண்டும். இதற்கு நான் ஒரு கதையைச் சொல்லப் போகின்றேன்.

ஒரு ஊரில் கிருதி என்ற ஒரு சிறுமி வாழ்ந்து வந்தாள். அவளுக்குப் பத்து வயது ஆகிறது. ஒருநாள் அவளது அம்மா சில பொருட்களைக் கொடுத்துக் கிருதியை, மாமி வீட்டிற்குச் சென்று வரும்படி கூறினார். அம்மா சொன்னது போல் மாமியிடம் கொண்டுபோய் கொடுப்ப தற்குச் சென்றாள். போகின்ற வழியில் பூனை ஒன்று மயங்கி இருப்பதைக் கண்டாள். அதைப் பரிதாபமாகப் பார்த்த இவள் அருகில் உள்ள ஆற்றில் கை நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதன் முகத்தில் தெளித்தாள். அது எழும்பவில்லை. பயந்த கிருதி ஓடோடிச் சென்று, மாமியிடம் கொடுக்கவேண்டிய பொருட்களைக் கொடுத்து விட்டு உடனடியாக அவ்விடத்திற்கு வந்தாள். அப்பொழுதும் பூனை எழும்பவில்லை. சிறிதுநேரம்பூனையைத் தூக்கிக் கொண்டு மிருகங்களுக்கு வைத்தியம் செய்யும் இடத்திற்குச் சென்றாள். அங்கு இருந்த மிருக வைத்தியர் சில நாட்களுக்குப் பூனைக்கு ஊசி போடவேண்டும்மென்று சொன்னார். கிருதி பூனையைத் தூக்கிச் சென்றாள். பூனை இப் பொழுது நன்கு குணமடைந்துவிட்டது. இப்பொழுது அவளது உயிர்த் தோழன் பூனை. பார்த்தீர்களா? இவள் எவ்வள வுக்கு பிற உயிர்களிடத்தில் அன்பு வைத்திருக்கின்றாள் என்று. அதுவுமல்லாது அம்மாவின் சொற்களையும் கேட்கின்றாள.

நாமும் அதேபோல் வாழ்வோம்.



**திருமதி. ர. லோகநாதன்**
ஆசிரியை,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண
மகாவித்தியாலயம்.

## எனது பொழுதுபோக்கு



1. எனது பொழுது போக்கு விளையாட்டு.
2. நான் எனது நண்பர்களுடன் விளை யாடுவேன்.
3. கிரிக்கெற் விளையாடுவதே எனக்கு விருப்பமான தாகும்.
4. நாங்கள் சண்டைபிடிக்காமல் ஒற்றுமையாக விளை யாடுவோம்.
5. எனது பொழுதுபோக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தை யும் தருகின்றது.

*ச. சுபப்பிரியன்*
ஆண்டு 2
யா/இந்து ஆரம்ப பாடசாலை.



## அம்மா



1. சிறந்த தெய்வம் அம்மா.
2. அம்மா மிக நல்லவர்.
3. அம்மா எனக்கு நல்ல உணவு தருவார்.
4. அம்மா பாடம் சொல்லித் தருவார்.
5. எனது அம்மா என்மீது அன்பு உள்ளவர்.

**கி. ரஷ்மி**
தரம் 2,
*ஸ்ரீ சத்திய சாயி பாடசாலை,*
மானிப்பாய்.

## உரும்பிராய் கிட்ஸ் பார்க் முன்பள்ளி பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தின விழாவும்



4+ மாணவர்களிற் சிலரும்
ஆசிரியர்களும்





செல்வி இ. ஓவியாவின்
நடனத்தோற்றம்.

நிகழ்வின் நிழல்கள்





## கிளி





1. கிளி அழகான பற
2. கிளி பச்சை நிறம்.
3. கிளியின் சொண்டு சிவப்பு நிறம்.
4. கிளி பழம் தின்னும்.
5. கிளி கீக்கீ என்று கத்தும்.

**இ. இலக்கியா**
தரம் 2,
*யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.*

## அறிந்து கொள்ளுங்கள்



- இலங்கையில் சினிமாத்துறை 1947இல் ஆரம்பிக்கப்பட்டது.
- நீரின்றி நீண்டகாலம் வாழும் ஒட்டகம் 300Kg எடையைத் தூக்கிச் செல்லும்.
- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன். அதனைத் தமிழில் மொழி பெயர்த்தவர் புலவர் மு. நல்லதம்பி.
- தேனீக்களுக்கு இரு வயிறுகள் உண்டு. ஒன்று தேன் எடுக்கவும்; மற்றது உணவிற்கும் பயன்படும்.
- இயேசுநாதர் 33 வயதில் உயிர்நீத்தார்.
- கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை நோர்வே நாடு அறிமுகப்படுத்தியது.
- ஒரு மனிதனின் ஒரு நாளைய உணவு 1Kg, தண்ணீர் 11/2 லீற்றர், காற்று 12Kg.

**ஜோ. சப்தனா**
தரம் 4,
*யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.*



கொக்குவில் இந்து முன்பள்ளி யின் சர்வதேச சிறுவர் தின விழா வின் கலை நிகழ்வொன்றில் செல்வி. ச. மயூரி அவர்களைப் படத்தில் காணலாம்.

## என்னைத் தெரியுமா உங்களுக்கு?



1. எனது பெயர் ந. சரண்யா.
2. எனது அம்மாவின் பெயர் ந. சுதமதி.
3. எனது அப்பாவின் பெயர் மா. நடராசா.
4. எனது ஊர் மட்டுமவில்.
5. எனது பாடசாலை யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
6. நான் விரும்பிப் படிக்கும் பாடங்கள் சமயமும் கணிதமும்.
7. எனக்கு விருப்பமான விளையாட்டு நீளம் பாய்தல்.
8. நான் விரும்பி உண்ணும் உணவு இட்லி.
9. நாம் விரும்பும் செல்லப் பிராணி கிளி.
10. நான் விரும்பும் பூ ரோஜா.
11. எனது பொழுதுபோக்கு நடனமாடுதல், சிறுவர் கதைகள் வாசித்தல்
12. எனது அப்பா அம்மாவுக்கு ஒரேயொரு செல்லப்பிள்ளை நானே.

**ந. சரண்யா**
தரம் 2,
*யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி.*

## பசு



1. பசு வீட்டு மிருகம்.
2. பசு பால் தரும்.
3. பசு புல் மேயும்.
4. பசு சாதுவான மிருகம்.
5. பசுக்கன்று துள்ளி விளையாடும்.

**யோ. மிதுஷன்**
தரம் 2,
*யா / வயாவிளான் ம.ம.வி.*

## ஒழுக்கம்



நன்மை செய்யக் காற்றுக் கொள்.
நலமாய் வாழக் கற்றுக்கொள்.
உண்மை பேசக் கற்றுக்கொள்.
உயர்வாய் வாழக் கற்றுக்கொள்.
துயரைப் போக்கக் காற்றுக்கொள்.
துணிந்து செயற்படக் கற்றுக்கொள்.
உழைத்து வாழக் கற்றுக்கொள்.
உள்ளத் தூய்மையைக் கற்றுக்கொள்.

**ஜெ. அகிலன்**
தரம் 3,
*யா / உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்

திரு. வே. உருத்திரேஸ்வரன்
B.Sc, Dip.in.Edu.

ஒவ்வொருவர்க்கும் இந்த "உலகம்", அண்டமும் வெவ்வேறு விதமாகப் புலப் படுகின்றதா? என்ற வினாவுக்கு விடைதர முயல்கின்றது இக்கட்டுரை.

அவரவர் கொண்டுள்ள அறிவிற்கும் (Knowledge), ஞானத்திற்கும் (wisdom) ஏற்ப மனிதர்களை பின்வரும் 3 பெரும் பிரிவுகளில் அடக்கிவிடலாம்.

1. சா்தாரண மனிதா்கள்
2. விஞ்ஞானிகள்
3. ஞானிகள்


சாதாரண மனிதர்களின் பார்வைக்கு, பொருட்களும் சக்தியும் நிறைந்ததாகவே இந்த "உலகம்" புலப்படுகின்றது. அதேபோல் வானமும், சூரியனும், சந்திரனும் நட்சத்திரங்களும் கொண்டதாகவே "அண்டம்" புலப்படுகின்றது.

விஞ்ஞானிகள் என்பவர்களும் மனிதர்களே ஆனாலும் அவதானங்கள், பரிசோதனைகள் என்ற ரீதியில் ஆராய்ச்சி (Rssearch) செய்து நம்பகத்தன்மை கூடிய தகவல்களை விஞ்ஞானக் கொள்கைகளாக விஞ்ஞானிகள் முன்வைக்கின்றனர். விஞ்ஞானிகளிடம் உள்ள அணுக் கொள்கை, அண்டக் கொள்கை ஆகியவை இந்த உலகத்தையும், அண்டத்தையும் வேறுவிதமாகச் சித்திரிக்கின்றன.

"பூமியிலிருந்தாலென்ன பிரபஞ்சத்திலிருந்தாலென்ன எந்த ஒரு பொருளும் "அணுக்கள்" (ATOMS) எனப்படும் சிறு உருண்டைகளின் சேர்மானமாக உள்ளன" என்பதே அணுக்கொள்கை ஆகும். அணுக்கள் கண்ணுக்குத் தெரியாத அளவு பருமன் கொண்ட சிறு உருண்டைகள் ஆகும். இந்த அணுக்கள் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்திருப்பதே பொருட்களாகும். 110 வகையான அணுக்களே உள்ளன. பொருட்களுக்கு இடையே நிலவும் வேறுபாட்டிற்கு பொருட்கள் கொண்டிருக்கும் அணுக்களின் வகைகளும் எண்ணிக்கையுமே காரணம். இவ்வாறு உலகிலும் அண்டத்திலுமுள்ள பொருட்களை "அணுக்களாக" விஞ்ஞானிகளால் தரிசிக்க முயலுகின்றனர்.

"எமது ஞாயிற்றுத் தொகுதியைப்போல மத்தியில் நட்சத்திரமும் அதனைச்சூழ கோள்கள் சுழலும் விதமான உடுத்தொகுதிகளை பெரும் எண்ணிக்கையில் கொண்டதே அண்டம்" என்று விஞ்ஞானிகளின் அண்டக்கொள்கை குறிப்பிடுகின்றது. மேலும் விஞ்ஞானிகளின் அணுக்கொள்கையும், அண்டக் கொள்கையும் அதிசயிக்கத்தக்க ஒரு ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுகின்றன.

அணுவின் மத்தியில் "அணுக்கரு" உள்ளது. கருவைச சுற்றி வெவ்வேறு வட்டப்பாதைகளில் "இலத்திரன்கள்" சதா சுற்றி வருகின்றன. இந்த வட்டப்பாதைகளில் மைய நாட்ட விசையும் மைய நீக்க விசையும் சமப்படுத்தப்பட்டிருப்பதால் "இலத்திரன்கள்" கருவினுள் வீழ்ந்துவிடாது தொடர்ந்து இயங்குகின்றன என்று அணு இயக்கம் விளக்கப்படுகின்றது.



உடுத்தொகுதியின் மத்தியில் நட்சத்திரமும் உள்ளது. நட்சத்திரத்தைச் சுற்றி வெவ்வேறு வட்டப் பாதைகளில் "கோளகள்" சதா சுற்றிவருகின்றன. இந்த வட்டப்பாதைகளில் மைய நாட்ட விசையும் மைய நீக்க விசையும் சமப் படுத்தப்பட்ட வட்டப்பாதையில் நிகழ்வதாக விஞ்ஞானிகள் ஒரு அதிசயிக்கத்தக்க ஒற்றுமையைச் சுட்டிக்காட்டு கின்றனர்.

நல்லது விஞ்ஞானிகளின் பார்வைக்கு இந்த உலகமும் பிரபஞ்சமுமு் ஒரே இயக்க அடிப்படையில் நிகழ்வதாகப் புலப்படுகின்றது.

இதே உலகமும், இதே அண்டமும், ஞானிகளின் பார்வைக்கு பரம்பொருளின் பிரதிபலிப்பாகப் புலப்படுகின்றது. ஞானிகளில் ஒருவரான ஔவையார் "விநாயகர் அகவல்", என்ற பாடலை அருளியுள்ளார். "சீதக்களபச் செந்தாமரை" என்று தொடங்கும் பாடலின் பிற்பகுதியில் இடம்பெறும் பின்வரும் வரிகள் இந்த உலகத்தையும் அண்டத்தையும் பரம்பொருளின் பிரதிபலிப்பாகச் சித்தரிக்கின்றன. இதோ அவ்வரிகள்

*"...சத்தத்தின் உள்ளே சதாசிவம காட்டிச்*
*சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி*
*அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்*
*கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி..."*

மேற்படி வரிகளின் கருத்து வருமாறு நாதமாகிய புறவுலகிலும், சித்தமாகிய அகவுலகிலும் சிவனைக் காணும்படிச் செய்து,

**சிறியவற்றுக்கு சிறியதாகவும், பெரியவற்றுக்குப்**
**- பெரியதாகவும்**
**உள்ள பொருள் என் உள்ளேயே கணுமுற்றி**
**- நின்ற கரும்பாக**
**நேரில் அனுபவித்து உணரக்கூடிய ரசமாக**
**- இருப்பதைக் காட்டி...**

ஆம்! சுாதாரண மனிதர்களுக்கு பொருட்கள் வடிவிலும் விஞ்ஞானிகளுக்கு அணுக்கள் வடிவிலும், ஞானிகளுக்கு பரம்பொருள் வடிவிலும் ஒரே உலகமும் ஒரே அண்டமும் வேறுபட்டுப் புலப்படுகின்றன.




அதிபர் வே. ஞானகாந்தன்

# யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் 'மழலைகள் அமுதம்' இறுவட்டு வெளியீடு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலை கல்வியில் மட்டுமல்ல, கலைத்துறையிலும் பல சாதனைகளை புரிந்து வருகின்றது. இவ்வகையில் இக்கல்லூரியின் கவின்கலை மன்றம் 'மழலைகள் அமுதம்' என்னும் இறுவட்டை 7-12-2008இல் வெளியிட்டு வைத்து சாதனை படைத்துள்ளது.



யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் முன்னாள் அதிபர் ஆ.சி. நடராஜா வெளியிட்டிருந்த சிறுவர் சிந்தனைக் கவிதைகள், கிராமியக் கலைகளில் ஒன்றான கரகம் மற்றும் காத்தவராயன் கூத்து என்பன இறுவட்டின் உள்ளடக்கங்களாகும்.



இந்நிகழ்வுகளில் சுமார் 50இற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி அசத்தியுள்ளார்கள்.

சிறுவர் சிந்தனைக் கவிதைகள், கரகம் என்பவற்றுக்குரிய நடனவாக்கத்தை கல்லூரி ஆசிரியை சி. தர்சினி அவர்கள் சிறப்பாக அமைத்து நெறிப்படுத்தியிருந்தார்.

காத்தவராயன் கூத்தினை தரம் 4 மாணவர்கள் பிரமிக்கத்தக்க வகையில் பாடிப்பாடி ஆடியமையும், சிறார்களது நடிப்பாற்றலும் யாவரையும் மெய் சிலிர்க்க வைப்பதாக அமைந்திருந்தது. இக்கூத்தின் நெறியாள்கையைச் செய்த கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர் திரு. ப. கணேசன், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஆசிரியர் திரு. சு. இளங்கோவன் ஆகியோரின் திறமை பாராட்டுதற்குரிய தாக இருந்தது.

இந்நிகழ்வுகள் யாவும் வெளிப்புறக் காட்சிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் இறுவட்டில் இடம்பெறும் நிகழ்வுகளை மிகச் சிறப்பாக ஒளிப்பதிவு செய்தவர் அரியாலையூர் ஒளிப்படக் கலைஞர் கா. ஜெயதாஸ் அவர்கள்.

கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் சாதனை நிலைநாட்டி வரும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தனும் அவரது ஆசிரியர்களும் தந்துள்ள இக்கலைப் படைப்பு அவர்களது அர்ப்பணிப்பினையும்,



கலைத்திறனையும் வெளிக்காட்டி நிற்கின்றன. இக்கல்லூரியின் கவின்கலை மன்றத்தினரின் இச்செயற்பாட்டினை வெற்றிமணி பாராட்டி மகிழ்கின்றது.

# பூமியில் முதல் காலடி பதித்த ஆம்ஸ்ரோங் யார்?




இலங்கையில் சிவனொளிபாதமலையில் கால் ஒன்றின் சுவடு இருக்கிறதாம். இது யாருடைய பாதம் சிவனுடையதா? இல்லை புத்தனுடையதா? இல்லை இரண்டும் இல்லை வேறு கடவுளுடையதா என மனிதன் அன்று தொட்டு தேடுகிறான்.

இந்த வேளையில் பிரான்ஸ் நாட்டில் தென்பகுதி யில் இருந்த ஒரு குகையில் 25 ஆயிரத்திற்கும் 30 ஆயிரம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு சிறுவனின் பாதச்சுவடு ஒன்று கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

நல்லவேளை இச்சிறுவனின் பாதத்தை கண்ணனோ, இராமனோ, புத்தனோ, பாலன் யேசுவோ எனக் குழப்பவில்லை. சந்திரனில் முதல் காலடி வைத்தவர் நீல் ஆம்ஸ்ரோங். அதேபோல் இந்தப் பூமியில் காலடிவைத்த இச்சிறுவன் தான் பூமிக்கு ஆம்ஸ்ரோங்?

இச் சிறுவனது பாதங்கள் 21 சென்ரிமீற்றர் நீளமானது. பாதங்களைக் கொண்டு இவன் வயது பத்து எனக் கணிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டு சப்பாத்து அளவின்படி 5,6 வயதுச் சிறுவர்களுக்குரிய சப்பாத்து அளவாகும்.

**தொடக்கத்தைவிட முடிவைப் பற்றி அதிகமாகச் சிந்தனை செய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாசன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம். (முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி)




## "சுகமான வாழ்விற்கு சுகமான நலத்திற்கு சுகமான கற்றலுக்கு சுக அப்பியாசம்"

### யாழ் கல்வி வலய உடற்கல்விப் பிரிவினரின் சுக அப்பியாசம் இறுவட்டு வெளியீடு


சுக அப்பியாசம் மாணவர்களிடம் ஆற்றல், வேகம், விவேகம் என்பவற்றை வளர்த்தெடுக்கும். அதனால் அவர்கள் செயற்படும் திறனுடையவர்களாக மிளிர்வர். எனவே, பாடசாலைகளில் மாணவர்களை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் அவாக்ளை மகிழ்வான சூழலுக்கு இட்டுச் சென்று, பின்னர் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் யாழ் கல்வி வலய



உடற்கல்விப் பிரிவினர் சுக அப்பியாசம் சுக அப்பியாசம் என்ற இறுவட்டை வெளியிட்டுள்ளனர்.

யாழ் கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் குமாரசாமியினாலும், அவரது குழுவினராலும் இவ் இறுவட்டுத் தயாரிக்கப் பட்டுள்ளது.

கீழைத்தேய, மேலைத்தேய இசை மரபுகளின் பல் வேறு இசைக் கோலங்கள் இங்கு பயன்படுத்தப்படுவதனால் பிள்ளைகளின் உடலியக்க, உள இயக்கச் செயற்பாடுகள் அதிகரிக்கும். இனிய இசை, துள்ளல் ஓசை என்பவற்றின் கூட்டுக் கலவையாக இது இருப்பதனால் அவர்கள் உற்சாகத்துடன் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான



மன உந்துதல்கள் அவர்களை அறியாமலே ஏற்படும். மன ஒருமைப்பாடு, செவிமடுக்கும் திறன், பிரயோகிக்கும் ஆற்றல்,



குழு ஒருங்கிணைப்பு போன்ற இயலுமைகள் மாணவர்களிடம் இயல்பாகவே வளரும். இவற்றினூடாக கல்வி இலக்குகளை அடைவதற்கான நோக்கம் நிறைவு பெறும்.


ஆகவே, **ஒவ்வொரு பாடசாலையிலும் இந்த இசைக் கோலத்தை ஒலிக்கச் செய்து மாணவர்களை சுக அப்பியாசத்தில் ஈடுபடுத்தவேண்டியது எமது தலையாய கடமையாகும்.**

## கொக்குவில் சிறுவன் யேர்மனியில் சாதனை!



ஜேர்மனியில் கெவல்ஸ்பேர்க் நகரில் வசிக்கும் செல்வன் காபிறியேல் குமணன் தனது நான்கு வயதில் சிற்றூர்ந்து ஓட்டப் போட்டியில் பங்குபற்றி அந்தப் பந்தயத்தில் காடு, மேடு, பள்ளம், குன்று, சமதரை மற்றும் வீதியால் ஓடும் வாகனங்களையும் தாண்டி 25 கிலோ மீற்றர் தூரத்தை ஓடி முடித்த இச்சிறுவனை Ski Club வாழ்த்தி வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழையும் வழங்கி யுள்ளது. இவர் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட குமணன் வாமினி தம்பதிகளின் புதல்வராவார்.

## சாதனையாளன்



யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ரி. தர்சன் 2008ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் 21 வயதின் கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 2ம் ஆடத்தைப் பெற்று வெளளிப்பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார். அத்துடன் 2005ம் ஆண்டு 17 வயதுக் கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் National colours ஐ பெற்றதுடன், சென். ஜோன்ஸ் கல்லூரியால் வழங்கப்படும் அதியுயர் விளையாட்டு விருதாகிய Jonian Eagls – 2005 ஆம் ஆண்டில் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சர்வதேசப் போட்டியில் பங்குபற்றிய தேசிய வீராங்கனை மைதிலி



அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை அணியில் (2007) பங்கு பற்றிய ஒரே தமிழ் வீராங்கனை செல்வி. இராசரத்தினம் மைதிலி. யாழ்ப்பாணம் சுன்னாகம் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், யூனியன் கல்லூரியின் மாணவியுமாவார்.



2008ம் ஆண்டில் தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் யா/ இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த செல்வி யாழினி சிவஞானம் 800 மீற்றர், 400 மீற்றர் போட்டிகளிலும், செல்வி கீர்த்திகா கீதபொன்கலன் சில்வா 100 மீற்றர் தடைதாண்டல், 200 மீற்றர் தடைதாண்டல், உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளிலும் பங்குபற்றி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மேற்படி மாணவிகளைப் படத்தில் காணலாம்.



2008ம் ஆண்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யா/ இராமநாதன் கல்லூரி 17 வயது அணியினர் மாகாணச் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டியிலும் பங்குபற்றினர். மேற்படி அணியினரையும், கல்லூரியின் அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம், பிரதி அதிபர் திருமதி ப. தியாகலிங்கம், பொறுப்பாசிரியர் திருமதி ப. கேசவன், பயிற்றுனர் திரு. இ. காண்டீபன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## உடற்பயிற்சி செய்வதன் நோக்கம்



*உடற்பயிற்சி என்பது*

உடல் உறுப்புக்களைப் பதமாக கிப் பாதுகாப்பது ஆகும். அதாவது உடல் உறுப்புக்களை இதமாக வளர்த்து வலிமை பெறச் செய்வதோடு உடலுக்கு நோய் வராமல் பாதுகாத்து உடலுக்குள்ளேயிருக்கும் சக்தியை வளர்த்துக் கொள்வதே உடற்பயிற்சி ஆகும்.

உடற்பயிற்சி செய்வதன் நோக்கமாக அமைவது உடலை செம்மையாக்குவது ஆகும். அதாவது உடற் பயிற்சியை நாம் அன்றாடம் மேற்கொள்கின்றபோது உடலானது வலிமையானதாகவும், உடற்திறனாகவும் உடற் கட்டுப்பாடு உடையதாகவும் காணப்படும்.

உடற்பயிற்சியால் பெறப்படும் சுகத்தை எவரும் வார்த்தைகளால் கூறிவிடமுடியாது. உடற் பயிற்சியைத் தொடர்ந்து செய்வதன் மூலம் ஒரு மனிதன் பூரணமான ஆரோக்கியத்தையும் சிறந்த ஆளுமையையும் வளர்த்துக் கொள்ளமுடியும். அத்துடன் உடல் உறுப்புக்கள் அனைத்தும ஒன்றுக்கொன்று சமநிலையோடு பணியாற்றச் செய்கிறது.

உடற்பயிற்சி செய்வதன் மூலம் இதயமானது நன்கு வலிமை உடையதாயும் இரத்த ஓட்டவேகம் சீரானதாகவும் காணப்படும். அத்துடன் உடல் முழுவதும் பலத்தை உண்டு பண்ணுகிறது. அவை மட்டுமன்றி உடலில் காணப்படுகின்ற கழிவுப் பொருட்களை விரைவாக வெளியேற்றுகின்றது. அத்துடன் உடலில் காணப்படும் சிவப்பு இரத்த அணுக்களும் வெள்ளை அணுக்களும் பொலிவு கொண்டதாகவும் காணப்படுகின்றது. அவற்றுடன் அதிக சுவாசக் காற்றை உள் இழுப்பதாய் அதிக ஆற்றலை வளர்த்துக் கொள்வதோடு திரள உறுப்புக்களைப் பலமாக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது; கடின வேலைகளைக்கூட எழுதில் செய்ய முடிகிறது.

எனவே தொகுத்து நோக்குமிடத்து உடற்பயிற்சியைச் செய்வதன் மூலம் உடல் வலிமையுடையதாயும், சிறந்த ஆளுமை உடையதாகவும் சிறந்த நிமிர்ந்த அழகான தோறத்தையும் உடலின் இயக்கத்தையும் மனிதனை சுறுசுறுப்பு உடையவனாக மாற்றுவதற்கு உடற்பயிற்சியானது சிறந்த சாதனமாக விளங்குகின்றமையினை நோக்கலாம்.

*இ. மீறாகினி*
2ம் வருடம்,
**உடற்கல்வி விஞ்ஞான அலகு,**
யாழ் / பல்கலைக்கழகம்.

விளையாட்டு உள்ளத்தைப் பண்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANDRA ஆதரவில்

# கலை அரங்கம்

## கலைகளில் கரைகாணத் துடிக்கும் கலைச்செல்வி ஒலிவியா தனபாலசிங்கம்




சின்னஞ்சிறு வயது முதல் கலைகளில் ஓவியமாகத் திகழ்பவள் செல்வி ஒலிவியா தனபாலசிங்கம். இவர் தம் கலைகளில் தான் எத்தனை எத்தனை வர்னங்கள். பரதநாட்டியம், வீணை, சங்கீதம், மெல்லிசை என இவர் தொட்டுச் செல்லாத கலைகள் இல்லை எனலாம். 1997ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற "கானம்பாடி" மெல்லிசைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் தனது 11வது வயதில் முதலிடத்தைத் தட்டிக் கொண்டார். தொடர்ந்து 1998இலும் இவரே!

2006இல் IBC நடாத்திய மேற்பிரிவில் இன்னிசைக்குரல் 2006 எனும் சிகரத்தையும், பரதத்தில் "ஆடற்கலையரசி" 2006 எனும் பட்டத்தையும் தனதாக்கியும் உயர்வு பெற்றார். இவர் திருமதி ரெஜினி சத்தியகுமார் அவர்களின் மாணவியாவார். அண்மையில் நடந்தேறிய Orental fine Arts Academy of Londaon நடத்திய பரீட்சையில் சங்கீதத்திலும், வீணையிலும் சித்திபெற்று Diploma பட்டம் பெற்றுள்ளார். ஐரோப்பாவில் (லண்டன் தவிர்ந்து) Diploma பட்டம் எடுத்த முதல் மாணவியாக ஒலிவியா திகழ்கின்றார். இவர் ஜேர்மனி சங்கீத பூசணம் செல்வசீராளன் அவர்களின் முதல் மாணவி. போட்டிகள் ஒரு கலைஞனை ஊக்கப்படுத்துகின்றன. அந்தப் போட்டிகளில் கிடைத்த வெற்றிகளை தன் கலைக்கு உரமாக்கிக் கொண்டு உரத்து முன்னேறுபவர்கள் தான் உண்மைக் கலைஞர்கள். கலைகளோடு தன்னைக் கரைத்து கலைகளின் கரைகாணத் துடிப்பவர்களில் ஒலிவியா தனபாலசிங்கம் மீண்டும் முதலிடத்தைப் பெறும் தகுதி பெறுகின்றார். கலைகள் யாவும் எங்கு சுற்றியும் எப்படிப் படர்ந்தாலும் அவை இறுதியில் இறைவனின் பெருமைகளைப் பகர்வனவாகவே உள்ளன. இதனை உளமாரப் புரிந்துகொண்ட ஒலிவியா தனது இனிய குரல் வளத்தை, வாழ்வை வளமாக்கும் இறைபணிக்கு அர்ப்பணித்து வருகிறார். இந்தச் சின்னவயதில் இப்படிச் சீரிய சிந்தனைகள் உதிக்கப்பெறுவது அரிது. இவரது ஒலிப்பேழைகள் பல தெய்வீக மணம் கமழ வெளிவந்துள்ளன. "நவ ஒலி" ஒலிப்பேழையை வெற்றிமணி சிவத்தமிழும் இங்கிலாந்தில் வசிக்கும் கே. சிவகுமாரனும் இணைந்து தயாரிக்க "ஐங்கரன்" வெளியீடாக வெளிவந்தது."துன்பத்தை நீக்கிடும் கனகதுர்க்கா" என்னும் தெய்வீகமணம் கமழும் இனிய பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழையை சுவெற்றா கனகதுர்க்கா ஆலயம் தயாரிக்க "ரமி" நிறுவனம் சுவிசில் வெளியிட்டுள்ளது. ஆஞ்சனேயன் வாயுதேவ Castrop - ஜயவீரா ஆஞ்சனேயர் ஆலயம் வெளியிட்டுள்ளது. இவர் மட்டுமன்றி இவர் குடும்பத்தில் இளைய சகோதரன் ஒடின் தனபாலசிங்கம் "மந்திரா" என்ற இசைப்பேழை ஒன்றை வெளியிட்டுள்ளார். இவர்களது கலையார்வம் எதிர்காலத்தில் பல சாதனைகள் புரிய வழி வகுக்கும் என்பது திண்ணம். ஆடற்கலையரசி ஒலிவியாவின் நடனங்கள், இசை நிகழ்வுகள் வெற்றிமணி, சிவத்தமிழ் விழாக்களிலும் வெற்றிமணி சர்வதேச விருது விழாவிலும் தெய்வீக மணம் கமழவைத்தன. இவர் கலைத்தொண்டு சிறக்கவும், வாழ்வு துலங்கவும் யாழ் வெற்றிமணி கலையரங்கு வாழ்த்துகின்றது.



## இலங்கையின் முன்னணி ஓவியர் ஜோர்ஜ் கீட்





இலங்கையில் ஓவியக் கலையில் முன்னணியில் திகழ்ந்த ஓவியர் ஜோர்ஜ் கீட். இவர் 1993இல் காலமானார். இவர் தனது வாழ்நாள் முழுவதையும் ஓவியக் கலைக்கு அர்ப்பணித்தவர். 1901 ம் ஆண்டு கண்டியில் கல்வியிற் சிறங்தோங்கிய குடும்பமொன்றில் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே புத்தகங்கள் வாசிப்பதிலும், ஓவியம் தீட்டுவதிலும் அதிக அக்கறை செலுத்தினார்.

வாழ்வின் மிக இளமைப் பருவத்திலேயே கிராமப்புறவாழ்வு இவரைக் கவரத் தொடங்கியது. இதன் காரணமாக இவர் தனது நகர்ப்புறச் சுற்றத்தைக் கைவிட்டு கிராமத்திற்குச் சென்றார். இங்கே தான் இவரது கலை வாழ்வு துலங்கத் தொடங்கியது. இவர் தனது 26ஆவது வயதில் தீவிர ஓவியராக மாறினார். ஓவியத்தில் மட்டுமன்றி சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளையும் இவர் அறிந்திருந்ததன் பயனாகக் கீழைத்தேய தத்துவம், பௌத்தம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். உண்மையில் இவரது ஓவியங்களைக் கூர்ந்து அவதானிக்கும்போது தத்துவ உந்தல்தான் இவரது கலை வெளிப்பாட்டின் அடிப்படை என்பது புலனாகும்.

இவரது ஆரம்பகால ஓவியங்கள் தத்ரூப வகையினைச் சார்ந்தவை. இவற்றில் பௌத்தமதச் செல்வாக்கு அதிகம் காணப்படுகிறது. இக்கால இவரது ஓவியங்களில் தனித்துவத் தன்மை குறைவு. இதற்குப் பிற்பட்டகால ஓவியங்களில் குறிப்பாக நாற்பதுகளின் பிற்பகுதியிலிருந்தே இவரது தனித்துவம் மிளிரத் தொடங்குகிறது. மேலைத்தேய நவீன ஓவியப் பாணியும், கீழைத்தேய தத்துவச் செழுமையுமே இவ் ஓவியங்களின் சிறப்பம்சமாகும். இவ்வகையான ஓவியங்களே இவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்ததுடன் இவரை ஒரு தனித்துவமான ஓவியராகவும் இனங்காட்டியது. இவரது அண்மைக்கால ஓவியங்கள் பெரும்பாலும் கோட்டுப் படங்களாக அமைந்திருக்கின்றன. தடித்த கடுமையான நிறத்திலான கோடுகளையே இவர் பாவித்தார். இவ்ரது ஓவியங்களில் வேகம், கோபம், காமம் போன்ற உணர்வுகள் அதிக செல்வாக்கினைப் பெறுகின்றன. இவரது எல்லா ஓவியங்களிலும் இத்தளம் தெளிவாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. ஆயினும் "பொரளை கோதாமி விகாரைச் சுவரோவியங்களைக் குறிப்பிடலாம். குறிப்பாக புத்தர் ஞானம் பெறும் காட்சி, தீய சிந்தனைக்கு உருக்கொடுத்து இவற்றில் காட்டும் உணர்ச்சித்தளம் அற்புதமாக உள்ளது.



இவர் நிறங்களின் தேர்ச்சியினூடாகவும், கோடுகளினூடாகவும் பல இடங்களில் மறை கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார். கடுமையான நிறங்கள் இவரது ஓவியங்களில் கருத்து ரீதியாக முக்கிய இடம் பெறுகின்றன. அதேவேளை மென்மையான இதமான உணர்வுகளை வெளிப்படுத்த கண்ணைப் பறிக்கும் இள நிறங்களையும் பாவித்துள்ளார். இவரது ஓவியங்களில் இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் உருச்செறிவு வெளிகளை இவர் வெறுக்கிறார். வெளிகள் தோன்றும் இடங்களில் உருக்களும், கோடுகளும் அவற்றை நிரப்பப் பயன்படுகின்றன. இதனை 'கோதமி விகாரைச்" சுவரோவியங்களில் நன்கு அவதானிக்கலாம். இவரது ஓவியக் காட்சிகள் பல பாகங்களிலும் நடைபெற்றுள்ளன. ஆயினும் தமிழ்ப் பகுதிகளில் இவரது ஓவியங்களை மிக அரிதாகவே காணக்கூடியதாக உள்ளது. 1947 ஆம் ஆண்டு ஓவியர் எஸ். ஆர். கனகசபையின் முயற்சியால் இவரது ஓவியக் கண்காட்சியொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இவரது ஓவியங்களைப் பற்றி மேலும் அறிய பின்வரும் நூல்கள் பேருதவியாக இருக்கும். Geoge Keyt - Marttin Russell, George Keyt - Afelicitation Volume, Geogre Keyt - A Life.







திரு. எஸ். வி. சங்கர்ராஜ்
ஆசிரியர்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



ANDRA DIGITAL IMAGE
உயர் கணனி வடிவமைப்பில்
- டிஜிற்றல் போர்ட்
- பிளெக்ஸ் பனர்கள்
- மகசீன் வகைகள்
- லேபிள்கள்

ADORNA CARDS
www.andradesigns.com
☎ 021-4590268
021-222 8929



மிகக் குறைந்த விலையில் உயர்தரமான
திருமண அழைப்பிதழ்கள்
யாழ் நகரில் முதன் முறையாக இணையத்தளத்தினூடாக உயர்தரமான திருமண அழைப்பிதழ்கள்...
இணையத்தள முகவரி: www.andradesigns.com
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
# 356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
# 6D.கே.கே.எஸ் வீதி , உப்புமடம் சந்தி, கோண்டாவில்.

கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது



Printed by: ANDRA DIGITAL IMAGE, JAFFNA

noolaham.org | aavanaham.org